ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2024
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2024
General Certificate of Education (Adv. Level) Examination, 2024

| | | |
|---|---|---|
| ශ්‍රී ලංකා ඉතිහාසය | I | (I කොටස) |
| இலங்கை வரலாறு | I | (பகுதி I) |
| History of Sri Lanka | I | (Part I) |

**25 T I**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**இலங்கை வரலாறு - ஆதிகாலம் முதல் கி.பி. 1978 வரை**

சுட்டெண் : ..................................

**அறிவுறுத்தல்கள் :**

- இவ்வினாத்தாள் பகுதி **I**, பகுதி **II** ஆகிய இரண்டு பகுதிகளைக் கொண்டது.
- பகுதி **I** இல் **1 - 40** வரையான எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய விடைகளை எழுதுக.
- பகுதி **I** இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வீதம் உரித்தாகும்.
- இரண்டு பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் மூன்று மணித்தியாலங்களாகும். விடைகளை எழுதி முடித்த பின்னர், பகுதி **I** இற்கான விடைத்தாள்களை பகுதி **II** இற்கான விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.

## பகுதி I

- **1** தொடக்கம் **10** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று மட்டும் ஏதோவொரு காரணத்தினால் ஏனைய பெயர்களுடன் பொருந்தாது உள்ளது. அந்தப் பொருந்தாத பெயரை இனங்கண்டு, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

**1.** (1) விஹாரகல (2) ஹபஸ்ஸ (3) தம்மன்னாவ (4) புந்தல (5) பாலுமகிச்சாவ (......)

**2.** (1) கோணநதி (2) மகாநதி (3) ஜஜ்ஜரநதி (4) கப்பகந்தரநதி (5) கதம்பநதி (......)

**3.** (1) பதவிபதி (2) பூபதி (3) மகிபதி (4) பிருதிவிஸ்வர (5) கணபதி (......)

**4.** (1) தேவநகல (2) குத்தகால (3) வாகிரிகல (4) மகாநாககுல (5) பலுத்தகிரி (......)

**5.** (1) மகாலான கித்தி (2) நிஸ்ஸங்க மல்லன் (3) வீரபாகு (4) சோடகங்க (5) சகஸ்ஸ மல்லன் (......)

**6.** (1) உடுநுவர (2) யடிநுவர (3) சப்பிரகமுவ (4) ஹரிஸ்பத்துவ (5) தும்பறை (......)

**7.** (1) தியாகோ த குட்டோ (2) ஜுவான் த பரொஸ் (3) கஸ்பர் கொறயா (4) பர்னாவோ த குவெரொஸ் (5) பிலிப்புஸ் பால்தியஸ் (......)

**8.** (1) றொபெட் பிறவுண்றிக் (2) எட்வர்ட் பாண்ஸ் (3) ஜான் மட்சுய்கர் (4) ஜோர்ஜ் அன்டர்சன் (5) அன்ரு கல்டிகொட் (......)

9. (1) ஜவர் ஜென்னிங்ஸ் (2) ஹென்றி மொங்க் மேசன் மூர் (3) ஒலிவர் குணதிலக
(4) வில்லியம் கொபல்லாவ (5) சோல்பரி பிரபு (......)

10. (1) ஜோன் கொத்தலாவல (2) டபிள்யு. தஹநாயக (3) டி. பி. ஜயதிலக
(4) டட்லி சேனநாயக (5) எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக (......)

● **11** தொடக்கம் **15** வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிச் சொற்கள் வீதம்** தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

11. (1) கலா ஓயா - கலா வாவி
(2) மல்வத்து ஓயா - நாச்சடுவ வாவி
(3) யான் ஓயா - ஹுருளு வாவி
(4) கனகராயன் ஆறு - இரணைமடு வாவி
(5) தெதுரு ஓயா - மஹாகணதரா வாவி (......)

12. (1) வேவல்கட்டிய கல்வெட்டு - புராதன சட்டமுறைமை பற்றிய தகவல்கள்
(2) சங்கமு விஹாரை கல்வெட்டு - கலிங்கவம்சம் பற்றிய தகவல்கள்
(3) பதுளை தூண் கல்வெட்டு - சந்தை நிர்வாகம் பற்றிய தகவல்கள்
(4) மடவல விகாரைக் கல்வெட்டு - குளம் ஒன்றின் உரிமை பற்றிய தகவல்கள்
(5) திம்பிரிவேவ கல்வெட்டு - இரண்டு அரசர்களுக்கிடையிலான உடன்படிக்கை பற்றிய தகவல்கள் (......)

13. (1) செகராசசேகரமாலை - யாழ்ப்பாண இராச்சியம் பற்றிய தமிழ் வரலாற்று நூல்
(2) சமந்தபாஸாதிகா - வினய பிடகத்துக்குரிய உரை விளக்க நூல்
(3) ஹத்தவனகல்லவிகார வம்ச - அத்தனகல்ல விகாரை பற்றிய புகழ்ந்துரை
(4) சஹஸ்ஸவத்துபகரண - தூபிகள் அமைத்தல் பற்றிய நூல்
(5) சங்கராஜவத - சரணங்கர தேரர் பற்றி எழுதப்பட்ட நூல் (......)

14. (1) கண்டி இராச்சியத்தின் முதல் ஆட்சியாளன் - சேனாசம்மத விக்கிரமபாகு
(2) யாழ்ப்பாண இராச்சியத்தின் முதல் ஆட்சியாளன் - செண்பகப் பெருமாள்
(3) முதலாவது போர்த்துக்கேய தளபதி - பீட்ரோ லோபெஸ் டி சூசா
(4) சீதவாக்கை இராச்சியத்தின் முதல் ஆட்சியாளன் - மாயாதுன்னை
(5) நாயக்கர் வம்சத்தின் முதல் ஆட்சியாளன் - ஸ்ரீ விஜய இராஜசிம்மன் (......)

15. (1) பொன்னம்பலம் அருணாசலம் - இலங்கைத் தேசிய காங்கிரஸ்
(2) ஏ. ஈ. குணசிங்க - இலங்கைத் தொழிலாளர் கட்சி
(3) ஜி. ஜி. பொன்னம்பலம் - அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்
(4) என். எம். பெரேரா - இலங்கை சமசமாஜக் கட்சி
(5) எப். ஆர். சேனநாயக - ஐக்கிய தேசியக் கட்சி (......)

● **16** தொடக்கம் **20** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுகள் / திகதிகளின் தொகுதிகள் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடரொழுங்கில் **தரப்படவில்லை. Y** நிரலில் உள்ளவற்றை **X** நிரலில் உள்ளவற்றுக்கேற்ப சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் **ஒன்று** சரியானதாகும். சரியான சேர்மானத்தின் **இலக்கத்தைத்** தெரிவுசெய்து **அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

16.

| X | Y |
|---|---|
| (i) பத்தபாசானவாபி | A - பதவிய வாவி |
| (ii) மனிஹிரிவாபி | B - மஹாமடகல வாவி |
| (iii) பதின்னொருவாபி | C - நாச்சடுவ வாவி |
| (iv) மண்டவாடகவாபி | D - மின்னேரியா வாவி |
| (v) அபயவாபி | E - பசவக்குளம் வாவி |

(1) C A B E D (2) C B A D E (3) C D A B E (4) C D B E A (5) C E B A D (......)

17.

| X | Y |
|---|---|
| (i) லங்காபுர | A - முதலாம் பராக்கிரமபாகு |
| (ii) மிகார | B - வட்டகாமினி அபயன் |
| (iii) ரவிதேவ | C - முதலாம் விஜயபாகு |
| (iv) கபிசீச | D - துட்டகைமுனு |
| (v) தெரபுத்தாபயன் | E - தாதுசேனன் |

(1) A E C B D (2) A E C D B (3) A E D B C (4) A E B C D (5) A E B D C (......)

18.

| X | Y |
|---|---|
| (i) கண்டக சைத்திய | A - அனுராதபுரம் |
| (ii) வெஸ்ஸகிரி | B - மிகிந்தலை |
| (iii) திவங்க சிலை | C - பொலன்னறுவை |
| (iv) விஜயசுந்தரராமய | D - குருணாகலை |
| (v) ரிதிவிகாரை | E - தம்பதெனிய |

(1) B A E C D (2) B A E D C (3) B A C E D (4) B A D E C (5) B A C D E (......)

19.

| X | Y |
|---|---|
| (i) மஹ பத்த | A - யானைகள் பற்றிய அலுவல்கள் |
| (ii) கொட்டல் பத்த | B - போக்குவரத்து அலுவல்கள் |
| (iii) குருவே பத்த | C - கறுவா பற்றிய அலுவல்கள் |
| (iv) மடிகே பத்த | D - கலைஞர்கள் பற்றிய அலுவல்கள் |
| (v) கின்னர பத்த | E - நெசவாளர் பற்றிய அலுவல்கள் |

(1) C D A E B (2) C D B A E (3) C D E A B (4) C D A B E (5) C D E B A (......)

20.

| X | Y |
|---|---|
| (i) பிரடெரிக் நோர்த் | A - சட்டவாக்க சபை, சட்ட நிர்வாக சபை தாபிக்கப்படுதல் |
| (ii) எட்வேர்ட் பாண்ஸ் | B - உயர் நீதிமன்றம் தாபிக்கப்படுதல் |
| (iii) வில்லியம் ஹோர்டன் | C - அருங்காட்சியகம் தாபிக்கப்படுதல் |
| (iv) வில்லியம் கிரகரி | D - கொழும்பு - கண்டி வீதி அமைக்கப்படுதல் |
| (v) ஹென்றி மக்கலம் | E - விவசாய திணைக்களம் தாபிக்கப்படுதல் |

(1) B A D C E (2) B A C D E (3) B D A C E (4) B A C E D (5) B A D E C (......)

- **21** தொடக்கம் **25** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து** விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று உரிய தலைப்பிற்குப் பொருந்தாதுள்ளது.** அதனைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை** எதிரேயுள்ள **அடைப்புக்குறியினுள்** எழுதுக.

21. **பொலன்னறுவைக் காலத்தில் நிர்வாகம்**
(1) நிர்வாகப் பொறிமுறையின் தலைவன் மன்னன் ஆவான்.
(2) சட்டம், ஒழுங்கு என்பவற்றின் மூலமாக மன்னன் கருதப்பட்டான்.
(3) அரசுரிமையானது தந்தையிடமிருந்து மகனுக்கு மட்டுமே உரிமையாக்கப்பட்டது.
(4) காணிவரி அரசின் முக்கிய வருமான மூலமாகக் காணப்பட்டது.
(5) இராச்சியத்தில் இருந்த அனைத்து காணிகளினதும் உரிமை அரசனுக்கே உரித்தானது எனக் கருதப்பட்டது. (......)

22. **றைகம்**
(1) றைகம் அழகேஸ்வர குடும்பத்தின் பிறப்பிடமாகும்.
(2) றைகமத்தில் வாழ்ந்த வீரஅழகேஸ்வரன் கோட்டையின் சுற்று மதிலைக் கட்டினான்.
(3) ஆறாம் பராக்கிரமபாகுவின் அரசாட்சி றைகமவிலிருந்து ஆரம்பித்தது.
(4) விஜயபாகு கொல்லயவின் பின்னர் றைகம் பண்டார றைகமத்தின் ஆட்சியாளன் ஆனான்.
(5) பாரஸ காவிய றைகமவில் எழுதப்பட்டது. (......)

**23.** முதலாம் இராஜசிங்க மன்னன்
(1) மாயாதுன்னையின் பின்னர் சீதவாக்கை இராச்சியத்தின் ஆட்சியாளன் ஆனான்.
(2) முல்லேரியாப் போரில் போர்த்துக்கேயரைத் தோற்கடித்தான்.
(3) முதலாம் இராஜசிங்கன் இலங்கையில் போர்த்துக்கேயர் ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டு வந்தான்.
(4) சுமார் பத்து வருடங்கள் கண்டி இராச்சியத்தை ஆட்சி செய்யக்கூடியவனாக இருந்தான்.
(5) பிள்ளைப்பருவத்தில் திகிரி இளவரசன் என்ற பெயரைப் பெற்றிருந்தான். (……)

**24.** ஆனந்த குமாரசுவாமி
(1) இவரின் தந்தை சேர் முத்துக்குமாரசுவாமி ஆவார்.
(2) அவர் இலங்கை சீர்திருத்தக் கழகத்தைத் தாபிப்பதில் முன்னோடியாக விளங்கினார்.
(3) 'மத்தியகால சிங்களக்கலை' என்ற நூல் இவரால் எழுதப்பட்டது.
(4) இவர் தொழில்ரீதியில் பூகற்பவியல் அறிஞர் ஆவார்.
(5) இவர் சீகிரியா ஓவியங்களை மீளுருவாக்கிய இரசாயனவியலாளர் ஆவார். (……)

**25.** 1977 ஆம் ஆண்டில் நடந்த பொதுத்தேர்தலின் பின்னரான நிலைமை
(1) 1977 பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு பெரும் வெற்றி கிட்டியது.
(2) ஜே. ஆர். ஜெயவர்தனா இந்தத் தேர்தலின் பின்னர் பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டார்.
(3) 1977 தேர்தலின் பின்னர் ஆனந்த திஸ்ஸ த அல்விஸ் சபாநாயகராக நியமிக்கப்பட்டார்.
(4) 1977 தேர்தலின் பின்னர் ரொனி த மெல் அவர்கள் நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டார்.
(5) 1977 தேர்தலின் பின்னர் ஏ. அமிர்தலிங்கம் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டார்.
(……)

- **26** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு தெரிவுகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் **ஒன்று** அல்லது பல சரியான விடையாகும். சரியான விடை அல்லது விடைகளைத் தெரிவுசெய்து,

**(A)** யும் **(B)** யும் மாத்திரம் சரியாயின் ........................................... **1** எனவும்
**(A)** யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின் ........................................... **2** எனவும்
**(B)** யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின் ........................................... **3** எனவும்
**(C)** யும் **(D)** யும் மாத்திரம் சரியாயின் ........................................... **4** எனவும்
**வேறு விடைகளின்** எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரியாயின் .......... **5** எனவும்
**அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **(A)** யும் **(B)** யும் மாத்திரம் சரி | **(A)** யும் **(C)** யும் மாத்திரம் சரி | **(B)** யும் **(C)** யும் மாத்திரம் சரி | **(C)** யும் **(D)** யும் மாத்திரம் சரி | வேறு விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரி |

**26.** பண்டுகாபய மன்னனின் ஆட்சிக்காலம் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பழைய கல்வெட்டுகள் பண்டுகாபய மன்னனின் ஆட்சிக்காலத்துக்கு உரியவை ஆகும்.
(B) பண்டுகாபய மன்னன் பாண்டிய இளவரசியைத் திருமணம் செய்தான் என்று மகாவம்சம் குறிப்பிடுகிறது.
(C) பண்டுகாபய மன்னன் இந்நாட்டின் கிராமங்களின் எல்லைகளை நிர்ணயித்தான் என்று மகாவம்சம் குறிப்பிடுகிறது.
(D) வம்ச கதைகளுக்கு அமைய பண்டுகாபய மன்னனின் தாயார் சித்திரா ஆவார். (……)

**27.** உருகுணை இராசதானியின் வரலாறு தொடர்பில் பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?

(A) தேவநம்பிய தீசனின் சகோதரனான மகாநாகன் உருகுணை தேசத்தை மாகமவிலிருந்து ஆட்சி செய்தான்.

(B) கோதாபய காஜரகாமத்தின் பத்து சகோதரர்களைத் தோற்கடித்து உருகுணை இராச்சியத்தில் தனது ஆதிக்கத்தை விரிவடையச் செய்தான்.

(C) சேரு, சோம, லோன ஆகிய இராசதானிகளை யதாலதிஸ்ஸ உருகுணை இராச்சியத்துடன் இணைத்துக் கொண்டான்.

(D) கவந்தீச மன்னன், பல்லுகவைத் தோற்கடித்து உருகுணை இராச்சியத்தின் ஆதிக்கத்தை மேலும் விரிவாக்குவதில் வெற்றிகண்டான். (……)

**28.** கம்பளை இராசதானி தொடர்பில் பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?

(A) கம்பளை இராசதானியின் முதல் ஆட்சியாளன் நான்காம் புவனேகபாகு மன்னன் ஆவான்.

(B) மயுர சந்தேச, திஸ்ஸர சந்தேச ஆகியன கம்பளைக் காலத்தில் எழுதப்பட்டன.

(C) சேனாலங்காதிகார, அழகக் கோனார் என்பன கம்பளை இராசதானிக் காலத்தில் இருந்த இரண்டு வலிமைமிக்க பிரபுக் குடும்பங்கள் ஆகும்.

(D) கடலாதெனிய, லங்காதிலக ஆகிய இரண்டு விகாரைகளும் கம்பளை இராசதானிக் காலத்தில் கட்டப்பட்டனவாகும். (……)

**29.** கண்டி இராசதானியின் நாயக்கர் ஆட்சியாளர் தொடர்பில் பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?

(A) ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திரசிங்கன் நாயக்கர் வம்ச முதல் ஆட்சியாளன் ஆவான்.

(B) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னன் நாயக்கர் வம்சத்தின் மிக முக்கியமான ஆட்சியாளனாக கருதப்படுகின்றான்.

(C) முன்னாள் மன்னரின் மனைவியின் சகோதரனுக்கு அரசுரிமையை வழங்கும் சம்பிரதாயத்தை நாயக்கர் ஆட்சியாளர் பின்பற்றினர்.

(D) இராஜாதிராஜசிங்கன் நாயக்கர் வம்சத்தின் கடைசி மன்னனாகக் கருதப்படுகிறான். (……)

**30.** பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் சுதேச விவசாயத்தை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?

(A) ஹென்றி வாட் ஆளுநர் இந்நாட்டின் புராதன நீர்ப்பாசன வேலைகளை புனர்நிர்மாணம் செய்வதில் அதிக ஆர்வத்துடன் செயற்பட்டார்.

(B) ரொறிங்ரன் பொலன்னறுவையில் அமைந்திருந்த பல குளங்களைப் புனர்நிர்மாணம் செய்தார்.

(C) நெற் பயிர்செய்கையை விருத்தி செய்யும் நோக்குடன் இக்காலகட்டத்தில் பல விவசாயக் குடியேற்றத் திட்டங்கள் அமைக்கப்பட்டன.

(D) பிரித்தானிய ஆளுநர்கள் கல்லோயாத் திட்டம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தினர். (……)

● **31** தொடக்கம் **35** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை **அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**31.** முதலாம் பராக்கிரமபாகுவின் பர்மா ஆக்கிரமிப்பு தொடர்பிலான தகவல் அடங்கிய கல்வெட்டு எது?

(1) கல்விகாரை கல்வெட்டு (2) தெவனகல கல்வெட்டு
(3) நயினாதீவு கல்வெட்டு (4) சங்கமுவிகாரைக் கல்வெட்டு
(5) மடவல பாறைக்கல்வெட்டு (……)

**32.** யாப்பகுவ இராசதானியின் முதலாவது ஆட்சியாளன் யார்?

(1) முதலாம் புவனேகபாகு (2) இரண்டாம் பராக்கிரமபாகு
(3) மூன்றாம் விஜயபாகு (4) நான்காம் விஜயபாகு
(5) இரண்டாம் புவனேகபாகு (……)

33. 1915 சிங்கள - முஸ்லிம் கலவரம் நடைபெற்ற சந்தர்ப்பத்தில் இந்நாட்டில் இருந்த ஆங்கில ஆளுநர் யார்?

(1) கியூ கிளிவ்போட் (2) ஜோன் அன்டர்சன் (3) கிரகம் தொம்சன்
(4) றொபேட் சாமர்ஸ் (5) ஹேர்பட் ஸ்ரான்லி (......)

34. இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் பற்றி ஆய்வு செய்த முதலாவது இலங்கை அறிஞர் யார்?

(1) செனரத் பரணவிதான (2) சீ. ஈ. கொடகும்பர (3) ஜேம்ஸ் ரி. ரத்தினம்
(4) பீ. ஈ. பீ. தெரணியகல (5) ஜஸ்ரின் தெரணியகல (......)

35. நெல் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் எது?

(1) அகலவத்தை (2) பத்தலகொட (3) லுணுவில
(4) கந்தானை (5) தலவாக்கலை (......)

- **36** தொடக்கம் **40** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருத்தமானதைத் தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **1** | சரியானது | பிழையானது |
| **2** | சரியானது | சரியானது |
| **3** | பிழையானது | பிழையானது |
| **4** | பிழையானது | சரியானது |
| **5** | சரியானது | சரியானதாக இருப்பதுடன் முதலாவது கூற்றை மேலும் விபரிக்கின்றது. |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|---|
| **36.** | உத்தரவிகார அத்தகதாவை அடிப்படையாகக் கொண்டு தீபவம்சம் எழுதப்பட்டுள்ளது. | கீர்த்தி ஸ்ரீ நிசங்கமல்லன் இந்நாட்டில் அதிக எண்ணிக்கையிலான கல்வெட்டுகளை பொறித்த ஆட்சியாளன் என்று கருதப்படுகின்றான். | (......) |
| **37.** | யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆட்சியாளன் கம்பளை இராசதானிக்குரிய பிரதேசங்களை ஆக்கிரமித்தான் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது. | குருணாகலை காலத்தில் சந்திரபானு இலங்கையை ஆக்கிரமிப்புச் செய்தான். | (......) |
| **38.** | தந்துரே போரை நடத்திய போர்த்துக்கேய தலைமைத் தளபதி தியோகோ த மெலோ த கஸ்ரோ ஆவார். | மொறட்டுவைப் பிரதேசத்தில் வீட்டுத் தளபாடங்கள் உற்பத்திக் கைத்தொழில் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்திலேயே ஆரம்பமானது என்று கருதப்படுகிறது. | (......) |
| **39.** | ஜேம்ஸ் ரெயிலர் என்பவராலேயே இலங்கையில் முதலாவது தேயிலைத் தோட்டம் ஆரம்பிக்கப்பட்டது. | பிரித்தானியரால் இலங்கைக்கு அச்சியந்திரம் அறிமுகம் செய்யப்பட்டது. | (......) |
| **40.** | சுதந்திரத்தின் பின்னர் இந்நாட்டின் முதலாவது நிதி அமைச்சராக இருந்தவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்தனா ஆவார். | 1972 அரசியல்யாப்பு அறிமுகம் செய்யப்பட்டபோது இந்நாட்டின் பிரதம மந்திரியாக சிறிமா ஆர். டி. பண்டார நாயக்க இருந்தார். | (......) |

❊ ❊

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2024
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2024
General Certificate of Education (Adv. Level) Examination, 2024

ශ්‍රී ලංකා ඉතිහාසය I (II කොටස)
இலங்கை வரலாறு I (பகுதி II)
History of Sri Lanka I (Part II)

25 T I

இலங்கை வரலாறு - ஆதிகாலம் முதல் கி.பி. 1978 வரை

**அறிவுறுத்தல்கள் :**

- ※ நான்கு வினாக்களுக்கு விடையளிக்கப்பட வேண்டும்.
- ※ பகுதி II ஆனது A, B, C ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்டது.
- ※ பகுதி A இன் வினா கட்டாயமானது.
- ※ பகுதி B, C ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு வினாவையேனும் தெரிவுசெய்து, மேலும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.

(முதலாம் வினாவுக்கு விடையளிப்பதற்கு இலங்கையின் புறவுருவப்படம் பகுதி I உடன் வழங்கப்பட்டுள்ளது.)

## பகுதி A

**1.** உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள எல்லா இடங்களையும் குறித்துப் பெயரிடுக.

| | | |
|---|---|---|
| (i) மாகம | (ii) தீகவாவி | (iii) ஜஜ்ஜர நதி |
| (iv) யோத வாவி | (v) மிகிந்தலை | (vi) கலாவாவி |
| (vii) யாழ்ப்பாணம் | (viii) களு கங்கை | (ix) கட்டுகஸ்தோட்டை |
| (x) திருகோணமலை | (xi) மினிப்பே | (xii) வடமத்திய மாகாணம் |

(சரியாகக் குறித்துப் பெயரிடுவதற்கு 01 புள்ளி வீதம்)

## பகுதி B

**2.** "புராதன இலங்கையின் தொடர்ச்சியான வரலாற்றை முன்வைக்கும் முக்கியத்துவம் வாய்ந்த வம்சக்கதை மகாவம்சம் ஆகும்."

(i) மகாவம்சத்தின் முதல் பகுதியின் ஆசிரியர் வாழ்ந்த பிரிவேனவின் பெயர் தருக. (01 புள்ளி)

(ii) மகாவம்சத்தின் முதல் பகுதியில் குறிப்பிடப்படும் கடைசி ஆட்சியாளனின் பெயர் தருக. (01 புள்ளி)

(iii) அனுராதபுரக் காலத்தின் அரசியல் வரலாற்றைக் கற்பதற்கு மகாவம்சம் எவ்வளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பரிசீலிக்குக. (07 புள்ளிகள்)

(iv) அனுராதபுரக் காலத்தின் பொருளாதார முறைமையைக் கற்பதற்கு மகாவம்சம் முக்கியத்துவம் பெறும் விதத்தினை விளக்குக. (07 புள்ளிகள்)

**3.** (i) தேவநம்பிய தீசனின் ஆட்சிக் காலத்தில் பௌத்த சமயம் இலங்கையில் தாபிக்கப்பட்ட விதத்தினைப் பரிசீலிக்குக. (08 புள்ளிகள்)

(ii) அனுராதபுர காலத்தில் பௌத்த சமயத்திலும் பிக்குமார் சாசனத்திலும் ஏற்பட்ட முக்கிய மாற்றங்களை எடுத்துக் காட்டுக. (08 புள்ளிகள்)

**4.** "முதலாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலம் புராதன இலங்கையின் நீர்ப்பாசன நடவடிக்கைகளின் அதி உன்னத நிலையின் அடையாளமாகும்."

(i) அனுராதபுரக் காலத்தில் பெரிய அளவிலான குளங்களைக் கட்டிய **இரண்டு** ஆட்சியாளர்களின் பெயர் தருக. (02 புள்ளிகள்)

(ii) அனுராதபுரக் காலத்தில் கட்டப்பட்ட **இரண்டு** கால்வாய்களின் பெயர் தருக. (02 புள்ளிகள்)

(iii) முதலாம் பராக்கிரமபாகு இலங்கையில் நீர்ப்பாசன அபிவிருத்திக்கு வழங்கிய பங்களிப்புப் பற்றி விமர்சனரீதியிலான பகுப்பாய்வு செய்க. (12 புள்ளிகள்)

**5.** பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) மன்னன் வசபன்

(ii) மாகனின் ஆக்கிரமிப்பு

(iii) குருநாகல் காலப்பகுதி

(iv) சபுமால் இளவரசன்

(08 × 2 = 16 புள்ளிகள்)

## பகுதி C

**6.** இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் போர்த்துக்கேயர் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிய விதத்தைப் பரிசீலிக்குக. (16 புள்ளிகள்)

**7.** "இரண்டாம் இராஜசிங்கன் இஞ்சியைக் கொடுத்து மிளகாயைப் பெற்றுக்கொண்டான்."

(i) இரண்டாம் இராஜசிங்கன் பிள்ளைப்பருவத்தில் எப்பெயரால் அழைக்கப்பட்டான்? (01 புள்ளி)

(ii) இரண்டாம் இராஜசிங்கனின் தந்தை, தாய் ஆகியோரின் பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)

(iii) கண்டி மன்னனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 1638 உடன்படிக்கை பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) போர்த்துக்கேயருக்கும் ஒல்லாந்தருக்கும் எதிராக இரண்டாம் இராஜசிங்கன் பின்பற்றிய கொள்கையை விளக்குவதற்கு மேலே தரப்பட்ட கூற்று எந்தளவுக்குப் பொருத்தமானதென்பதைப் பரிசீலிக்குக. (09 புள்ளிகள்)

**8.** பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையின் கோப்பிப் பயிர்ச்செய்கை விருத்தியில் செல்வாக்குச் செலுத்திய முக்கிய காரணிகளைப் பின்வரும் தலைப்புகளின் கீழே கலந்துரையாடுக.

(i) மூலதனமும் முயற்சியாண்மையும்

(ii) நிலம்

(iii) உழைப்பு

(16 புள்ளிகள்)

**9.** பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

(i) போர்த்துக்கேயர் பின்பற்றிய சமயக்கொள்கை

(ii) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையில் நிலவிய தொடர்பு

(iii) பிரித்தானியாரால் கண்டி கைப்பற்றப்பட்டமை

(iv) எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா

(08 × 2 = 16 புள்ளிகள்)

❊ ❊ ❊